## நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிட்டட் - 2017

---

நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிட்டட் - 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்களின் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதும் கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்)**

சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 4 இன் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம், 06 மாதங்கள் முதிர்ச்சி காலத்தையுடைய ரூபா 5,802,607 தொகையான கம்பனிக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

சோமாவதி நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 25,000 தொகையான முற்பணங்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் செலவினமாக காட்டப்பட்டிருந்தது.

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| பிடித்து வைத்தல் வரி (டபிள்யூஎச்ரீ) | 75,767 | வரிச் சான்றிதழ்கள் |
| பெற வேண்டிய வருமானம் | 433,118 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நெச்சுரல் ரிசோஸ் மெனேஜ்மென்ட் சேர்விஸஸ் (தனியார்) லிமிட்டட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும், கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பினயால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்.**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 39(1) ஆம் பிரிவு | வரிசை அமைச்சினால் நியமிக்கப்பட்ட அரச பணிப்பாளர்களையும் பங்குதாரர்களினால் நியமிக்கப்பட்ட பங்குதாரர் பணிப்பாளர்களையும் உள்ளடக்கி 07 உறுப்பினர்களைக் கொண்டதாக பணிப்பாளர் சபை காணப்படவேண்டிய போதிலும், தற்போதைய பணிப்பாளர் சபையின் நான்கு எண்ணிக்கையும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) 42(1) ஆம் பிரிவு | இலங்கை மகாவலி அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தில் கம்பனியின் மூலதனம் ரூபா 100 ஆன சாதாரண பங்குகளினை கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் கூட்டிணைப்பு கட்டளையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 10,000,000 பங்குகளினை கொண்டிருந்தது. இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் முன்னாள் இரண்டு பணிப்பாளர்களுக்கு முறையே 1500 பங்குகள் மற்றும் 02 பங்குகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 45(1) ஆம் பிரிவு | பணிப்பாளர்களில் ஒரு பணிப்பாளர் கம்பனியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் தலைவர் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார். |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூன் 17 ஆந் திகதிய 03 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 2.2 ஆம் பிரிவு | கம்பனிகள் வகைப்படுத்தலின் “F” உப வகைப்படுத்தலின் வரம்பின் கீழ் வருகின்ற அரச உரிமையினைக் கொண்டுள்ள கம்பனி தலைவரின் மாதாந்த படிகளினை செலுத்துவதற்கு வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளுடன் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். இருப்பினும், 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு முறையே ரூபா 112,500 மற்றும் ரூபா 450,000 தொகையான தலைவருக்கு செலுத்தப்பட்ட படிகளுக்கு நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சு செயலாளரின் பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2.10 ஆம் பிரிவு | தலைவரின் மாதாந்த படிகளிலிருந்து மற்றும் நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களின் கூட்டங்களின் பங்கேற்பிற்கான வருகைக்கான படிகளிலிருந்து தொடர்புடைய வரிகள் கழிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 450,000 படிகள் மற்றும் கூட்டங்களுக்கு பங்குபற்றியதற்கு நிறைவேற்றல்லாத 09 பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 54,000 வருகைதரு படிகளிலிருந்து ரூபா 50,400 தொகையான பிடித்துவைத்தல் வரி கழிக்கப்பட்டிருக்காததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 2.11 ஆம் பிரிவு | நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களுக்கு மாத்திரம் கூட்டங்களின் வருகைதருக்கான படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், கூட்டங்களுக்கான வருகைதரு படிகளாக கணக்காளர் மற்றும் முகாமையாளருக்கு ரூபா 6,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 814,640 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,380,891 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,195,531 ஆன பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. ஊழியர்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் ஊதியம் ரூபா 974,725 இனால் அதிகரித்தமை மற்றும் கம்பனியின் வருமானம் ரூபா 1,904,205 இனால் குறைவடைந்தமை முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளின் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்கையில், 2013 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 785,270 தொகையாகக் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,380,891 தொகையான வரிக்குப் பின்னரான தேறிய நட்டமொன்றிற்கு மாற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், பெறுமானத்தேய்வு மற்றும் நிதிசார் விளைவுகளுக்கான ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் வரிகளினை மீள சரிப்படுத்துகையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,428,383 ஆக தொடர்ந்தும் காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு எதிராக ரூபா 689,414 ஆக குறைவடைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அமைப்பு அகவிதியின் பிரகாரம், அமைவிடம், மண்களின் பகுப்பாய்வு மற்றும் விபரணம், காணி கட்டமைப்புக்கள், நிலத்தின் அமைப்பு, காணி பயன்பாடு, தாவரங்கள், உயிர் பல்வகைமை, காணி உரிமைத்துவம், தரை மதிப்பீடுகளிலிருந்து நீர் தரம் மற்றும் ஏனைய சுற்றுச்சூழலியல் அளவுருக்கள், வான்வழிப் புகைப்படம், செயற்கைகோல் புகைப்படம், இலங்கையில் மற்றும் ஏதேனுமிடத்தில் புவியியல் தகவல் முறைமை மற்றும் குளோபல் பொசிஷனிங் முறைமை என்பன மற்றும் சூழல் சான்று பத்திரங்களினை வழங்குவது கம்பனியின் பிராதன செயற்பாடாகக் காணப்படுகின்ற அதேவேளை, காணி வளங்கள் மதிப்பீடு மற்றும் காணி பயன்பாட்டு திட்டமிடல், மண் அரிப்பு மற்றும் மண் பாதுகாப்பு, பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம், மருத்துவ ரீதியான பயிர்கள் மற்றும் நிலைபேறான உயிரின விவசாய முறைமையின் மீதான ஆலோசனை, திட்டம், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டலினை வழங்குவது கம்பனி ஸ்தாபிப்பதற்கான அடிப்படை நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

03 ஊழியர்களினை கொண்டதாக கம்பனியின் பதவியணியனர் காணப்படுகின்றதுடன் குறித்துரைக்கப்பட்ட பதவியணியினர்க்கு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அல்லது பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் கம்பனி பதவியணியினருக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவியுயர்வுகள் மற்றும் பதவியணியினர் தொடர்பிலான தகைமைகள் மற்றும் சம்பள தீர்மானங்களின் துல்லியத்தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கம்பனியின் ஸ்தாபிப்பு

1979 இன் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 1999 யூலை 20 இலிருந்து அமுலுக்கு வரும்வகையில் கம்பனியொன்றாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2008 யூன் 16 இல் மீள பதிவுசெய்யப்பட்டது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ஸ்தாபிப்பின் நோக்கங்களினை வெளிப்படுத்தல் தொடர்பிலான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டிய போதிலும், அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனியின் வினைத்திறனான செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் சில கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திட்டங்களின் தயாரிப்பு | நோக்கங்களினை செயல்படுத்துவதற்கு கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) செயலாற்றல் | அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) பதவியணியினர் நிர்வாகம் | கம்பனிக்கென குறித்துரைக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாமை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிராமை. |